Aathiyoga Indian Journal of Ancient Medicine and Yoga
Peer Reviewed Multidisciplinary Journal

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

# Vedhathiri Maharishi's Helio-Centric Philosophy of Fulfillment: An Exposition

**Mr. G. Premanandham B.E.,(Mechanical)**
SKY Yoga Teacher, #02-26 Parc Life,33 Sembawang Crescent, Singapore
Phone number : Singapore +65 85155047
India:8610098037
Email: anandhamprem3@gmail.com

**Abstract:**
Rooted in Vethathiri philosophy, this article delves into the profound and multifaceted significance of the Sun, not merely as a celestial body, but as a fundamental force and conscious entity intimately intertwined with creation itself. It explores the Vedic perspective that the Sun is the very origin point, the primordial seed from which Earth, the vast expanse of the Milky Way, and indeed the entirety of the known and unknown universe have sprung. This perspective elevates the Sun beyond a simple star, portraying it as a central intelligence and generative principle. The article posits that a deep and nuanced understanding of a single Sun – its energies, rhythms, and inherent wisdom – holds the key to unlocking the secrets of all suns scattered throughout the cosmos, revealing patterns in their behavior, trajectories, and interactions. It suggests that by meticulously studying and comprehending the intricacies of our own Sun, we gain access to a universal language, a cosmic code that illuminates the underlying principles governing the celestial dance of all stars.Furthermore, the article argues that by engaging with the Sun on a deeper, philosophical level through the lens of Vedic wisdom, we can unveil the deeper mysteries of the universe – the mechanisms of creation, the nature of consciousness, and our place within the grand cosmic scheme. It promises to explore how Vedic scriptures and practices, such as Surya Namaskar and specific mantras, can facilitate a deeper connection with the Sun and unlock a greater understanding of ourselves and the universe we inhabit, offering a unique and holistic perspective on cosmic origins and the interconnectedness of all things.

Keywords: mysteries of the universe, Sun, Universe, Vethathiri Philosophy

## சூரியனில் நிறைவு தரும் வேதாத்திரிய தத்துவம்: விரிவான விளக்கம்

**சுருக்கம்**
இந்தக் கட்டுரை, வேதாத்திரிய தத்துவத்தின் அடிப்படையில், சூரியனின் முக்கியத்துவத்தையும், அதன் உருவாக்கத்தையும் ஆழமாக ஆராய்கிறது. உலகம் உட்பட அனைத்து நாடுகளின் உருவாக்கம், பால்வெளி மண்டலத்தின் தோற்றம், மற்றும் ஒட்டுமொத்த பிரபஞ்ச அண்டத்தின் உற்பத்தி ஆகிய அனைத்தும் எவ்வாறு தோன்றுகின்றன என்பதை விளக்குவதே இதன் முக்கிய நோக்கம். ஒரு சூரியனைப் பற்றிய முழுமையான விளக்கம், பிரபஞ்சத்தில் உள்ள எண்ணற்ற சூரியன்களின் அடிப்படை மற்றும் இயக்கத்தை புரிந்து கொள்வதற்கான திறவுகோலாக அமையும். அதாவது, ஒரு சூரியனைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது, பிரபஞ்சத்திலுள்ள அனைத்து சூரியன்களையும் பற்றி புரிந்துகொண்டதற்கு சமம். இதன் மூலம், வேதாத்திரிய தத்துவத்தின்படி, பிரபஞ்சத்தின் ஆழமான ரகசியங்களை

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

வெளிக்கொணர முடியும்.

சூரியனில் இருந்து வரும் ஆற்றலின் ஆதாரம் சூரியனின் மையத்தில் நிகழும் அணுக்கரு இணைவு செயல்முறையாகும். சூரியனின் உள்ளே நிகழும் குறிப்பிட்ட வகை இணைவு புரோட்டான்-புரோட்டான் இணைவு அல்லது பிபி சங்கிலி வினை என அழைக்கப்படுகிறது. இதுவே சூரிய ஆற்றலின் முதன்மை ஆதாரம்.

சூரியனுக்குள், இந்தச் செயல்முறை பல நிலைகளில் நடைபெறுகிறது. இதில் முதல் கட்டம் இரண்டு புரோட்டான்களுடன் தொடங்குகிறது. புரோட்டான்கள் என்பவை ஹைட்ரஜன் அணுவின் உட்கருவில் உள்ள அடிப்படைத் துகள்களாகும்.


முதல் கட்டத்தில், இரண்டு புரோட்டான்கள் ஒன்றோடொன்று இணைந்து டியூட்ரானாக மாறுகின்றன. டியூட்ரான்கள் என்பது ஒரு புரோட்டான் மற்றும் ஒரு நியூட்ரான் இணைந்து உருவான ஹைட்ரஜனின் ஐசோடோப்பாகும். இந்த இணைவு நிகழும்போது, ஒரே ஒரு புரோட்டான் மட்டும் நியூட்ரானாக மாறுகிறது. அத்துடன் பாசிட்ரான் (positron) மற்றும் நியூட்ரினோ (neutrino) ஆகிய துகள்கள் வெளிவருகின்றன. இங்கு கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், ஒரு புரோட்டான் நியூட்ரானாக மாறும்போது, அதன் மின்சுமை மாறுகிறது. இந்த மாற்றத்தின்போது பாசிட்ரான் என்ற துகள் வெளிவருவது ஒரு முக்கியமான நிகழ்வு. மேலும், நியூட்ரினோக்கள் கிட்டத்தட்ட ஒளியின் வேகத்தில் பயணிக்கும் சிறிய, மின்சுமையற்ற துகள்களாகும். இந்த நியூட்ரினோக்கள் சூரியனில் இருந்து நேரடியாக வெளியேறி விண்வெளியில் கலக்கின்றன.

சூரியனில் இரு புரோட்டான் இணையும் நிகழ்வில்...
ஒரு புரோட்டான் எந்த ஒரு மாற்றமும் (எடை அல்லது பண்புகளில்) இல்லாதது மிகவும் ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் ஏற்படுத்துகிறது!
மீதமுள்ள மற்றொரு புரோட்டான் மட்டும் நியூட்ரானாக மாறுகிறது. இந்த மிக அற்புதமான நிகழ்வு, சூரியனில் முதன் முதலில் அணுக்கருவினை உருவாக்கி அதன் மூலம் சூரியன் பல கோடி வருடங்களாக நீடித்து நிலைத்து நிற்க ஆரம்ப புள்ளியாக உள்ளது.

*3*

Aathiyoga Indian Journal of Ancient Medicine and Yoga
Peer Reviewed Multidisciplinary Journal
ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

Nuclear fusion in the Sun




**புரோட்டானுக்குள் குவார்க் இணைவு**:

ஒரு புரோட்டானின் உள்ளே நிகழும் குவார்க் (Quark) இணைவு என்பது ஒரு தனித்துவமான நிகழ்வு. இதில், புரோட்டானில் இரு. க்கும் குவார்க்குகளில், குறிப்பாக ஒரு "அப் குவார்க்" (Up Quark), "டவுன் குவார்க்"காக (Down Quark) மாறுகிறது. இந்த மாற்றம்தான் பீட்டா பிளஸ் சிதைவுக்கு (Beta Plus Decay) வழி வகுக்கிறது.

**மற்ற குவார்க்குகளின் பங்கு**:

புரோட்டான்-புரோட்டான் இணைவு நிகழும் போது, மற்ற ஐந்து வகையான குவார்க்குகளான டாப் (Top), பாட்டம் (Bottom), சார்ம் (Charm), ஸ்ட்ரேஞ்ச் (Strange) மற்றும் குளுவான்ஸ் (Gluons) ஆகியவற்றின் எடை அல்லது பண்புகளில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. இந்த இணைவு, இரு புரோட்டானில் ஒரே ஒரு புரோட்டானில் இருக்கும் அப் குவார்க்கில் மட்டுமே கவனம் செலுத்துகிறது.

**குவார்க்குகளின் எடை வேறுபாடு**:

- டவுன் குவார்க் (Down Quark) : 4.79 +/- 0.16 MeV எடை கொண்டது.
- அப் குவார்க் (Up Quark): 2.01 +/- 0.14 MeV எடை கொண்டது.

டவுன் குவார்க், அப் குவார்க்கை விட அதிக எடை கொண்டது என்பதை இந்த வேறுபாடு காட்டுகிறது.

**பீட்டா பிளஸ் சிதைவுக்கான சமன்பாடு**:

பீட்டா பிளஸ் சிதைவுக்கான சமன்பாடு பின்வருமாறு:

 Published by : Department of Human Excellence, Nallamuthu Gounder Mahalingam College

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

$p \rightarrow n + e^{+} + \nu_e$

இங்கு,

- p என்பது புரோட்டானைக் குறிக்கிறது.
- n என்பது நியூட்ரானைக் குறிக்கிறது.
- e+ என்பது பாசிட்ரானைக் (positron) குறிக்கிறது.
- ve என்பது எலக்ட்ரான் நியூட்ரினோவைக் (electron neutrino) குறிக்கிறது.

இந்தச் சமன்பாடு, புரோட்டான் சிதைவடைந்து நியூட்ரான், பாசிட்ரான் மற்றும் எலக்ட்ரான் நியூட்ரினோவாக மாறுவதை விளக்குகிறது. இந்த நிகழ்வு, அப் குவார்க் டவுன் குவார்க்காக மாறுவதன் விளைவாக நிகழ்கிறது

**INTRODUCTION (அறிமுகம்)**

சீனா, தென்கொரியா போன்ற நாடுகள் செயற்கை சூரியனை முறையே 30, 48, மற்றும் 101 வினாடிகள் வரை உருவாக்குவதையே ஒரு பெரிய சாதனையாகக் கூறி வருகின்றன. ஆனால், இறைநிலையானது பல லட்சம் ஆண்டுகளாக சூரியனையும், எண்ணற்ற நட்சத்திரங்களையும் உருவாக்கி, அவை நிலைத்து நீடித்து, சீராக வலம் வரச் செய்கிறது. இதற்குக் காரணம் நமது இயற்கை சூரியன், நியூட்ரான் எனப்படும் இறைத்துகள்களின் தொகுப்பை அருளாகப் பெற்றிருப்பதே ஆகும்.

உலக நாடுகள் நியூட்ரான் என்ற இறைத்துகள்களின் தொகுப்பை ஆராய்ச்சி செய்து, அதன் அடிப்படையில் செயற்கை சூரியனை உருவாக்கினால் மட்டுமே, அது நிறைவானதாகவும், நிரந்தரமானதாகவும் இருக்கும். தற்போது செயற்கை சூரியனை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள உலக நாடுகள், இயற்கை உருவாக்கிய சூரியனின் தத்துவத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். இயற்கை சூரியனில் இறைநிலை எவ்வாறு இறைத்துகள்களைக் கொண்டு நியூட்ரானை உருவாக்கியுள்ளது என்பதை ஆராய்ச்சி செய்து, அதன் நுட்பங்களை அறிந்து தெளிவு பெற வேண்டும். இதன் மூலம், செயற்கை சூரியனை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஒரு புதிய பாதையை உருவாக்க முடியும்.

**சூரியனும் ஆன்மீகமும்: ஓர் புதிய கண்ணோட்டம்**

இதுவரை விஞ்ஞானம் சூரியனில் அணுக்கரு இணைவு நடைபெறும் நிகழ்வில் ஈடுபட்டுள்ள புரோட்டானில் உள்ள குவார்க் ஃப்யூஷன் (QUARK FUSION) என்ற இறை துகள்களின் கூட்டத்தில் மாற்றம் ஏற்படுவதை ஆராய்ந்துள்ளது. தற்காலிக விஞ்ஞானம் "பீட்டா பிளஸ் சிதைவு" (BETA PLUS DECAY) என்று துல்லியமாக ஆராய்ச்சியில் வந்துள்ளது.

ஆனால் நமது ஆன்மீக மெய்ஞான ஆராய்ச்சியில் உலகிற்கு புதிய தத்துவம் செல்கிறது. சூரியனில் உள்ள புரோட்டானில் எடை குறைவாக உள்ள "அப் குவார்க்" (UPPER QUARK), எடை அதிகமான "டவுன் குவார்க்" (DOWN QUARK) ஆக எப்படி மாறுகின்றது என்பதைப் பற்றியும், அதற்கு வேதாத்திரி மகரிஷி அவர்களின் இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த தத்துவமான "இறைநிலையின் தன்னிருக்க சூழ்ந்தலுத்தும் ஆற்றல்..." என்று தொடங்கும் பிரம்மஞான பாடல் தத்துவம் சூரியனில் குவார்க் ஃப்யூஷன் நிகழ்ச்சி பற்றி தெளிவான விளக்கத்தைப் பெற மிகச் சிறப்பாக உதவுகிறது.

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

சூரியனில் குவார்க் ஃப்யூஷன் (QUARK FUSION) நிகழ்ச்சி நடைபெறும் பொழுது, ஒரு புரோட்டானின் "டவுன் குவார்க்" (DOWN QUARK) மற்றொரு புரோட்டானின் "அப் குவார்க்" (UPPER QUARK)மீது மோதும் பொழுது "அப் குவார்க்"கில் (UPPER QUARK) மட்டும் வெற்றிடம் ஏற்படுகிறது. இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு இறைநிலையின் தன்னிருக்க சூழ்ந்தலுத்தும் ஆற்றல் இறை துகள்களை உருவாக்கி அந்த வெற்றிடத்தை நிரப்பி விடுகிறது. புரோட்டானில் உள்ள எடை குறைந்த "அப் குவார்க்"கை (UPPER QUARK), எடை அதிகமான "டவுன் குவார்க்" (DOWN QUARK) ஆக மாற்றி விடுகிறது. அதன்மூலம் எடை குறைந்த புரோட்டானை எடை அதிகமான நியூட்ரான் ஆக மாற்றுகிறது என்பதை விளக்கமாகக் கூறுகிறது.


இதன் மூலம் எடை அதிகமான நியூட்ரானை எந்த சேதாரமும் இல்லாமல் இருக்கும் மற்றொரு புரோட்டான் அந்த நியூட்ரானை சுற்றி வருகிறது, இதனால் அணுக்கரு நீடித்து நிலைக்கின்றது.

இந்த அணுக்கரு நீடித்து நிலைப்பதன் மூலம் இயற்கை சூரியன் பல கோடி வருடங்களாக நீடித்து நிலைத்து உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் உணவளித்து வாழ்வுக்கு ஆதாரமாக உள்ளது.

சூரியன் கோடிக்கணக்கான வருடங்களாக நீடித்து நிலைத்து ஆற்றலைத் தந்து கொண்டே இருப்பதற்கு வேதாத்திரி மகரிஷி அவர்களின் பிரம்ம ஞான பாடல் "பீட்டா பிளஸ் சிதைவு" என்ற சூரியனைப் பற்றிய குவாண்டம் இயற்பியல் ஆராய்ச்சிக்கு உதவுகிறது.

*4*

Aathiyoga Indian Journal of Ancient Medicine and Yoga
Peer Reviewed Multidisciplinary Journal
ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025




**RESULTS ( முடிவுகள்)**

இதுவரை விஞ்ஞானம் சூரியனில், அணுக்கரு இணைவு நடைபெறும் நிகழ்வில் ஈடுபட்டுள்ள புரோட்டானில் உள்ள QUARK FUSION என்ற இறை துகள்களின் கூட்டத்தில் மாற்றம் ஏற்படுவதை ஆராய்ந்துள்ளது. தற்காலிக விஞ்ஞானம் BETA PLUS DECAY.. என்று வரை துல்லியமாக ஆராய்ச்சியில் வந்துள்ளது. ஆனால் நமது ஆன்மீக மெய்ஞான ஆராய்ச்சியில் உலகிற்கு **புதிய தத்துவம்** செல்கிறது.

சூரியனில் உள்ள புரோட்டானில் எடை குறைவாக உள்ள UPPER QUARK , எடை அதிகமான DOWN QUARK ஆக எப்படி மாறுகின்றது. என்பதைப் பற்றியும் அதற்கு வேதாத்திரி மகரிஷி அவர்களின் இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த தத்துவமான இறை நிலையின் தன்னிருக்க சூழ்ந்தலுத்தும் ஆற்றல் ...
என்று தொடங்கும் பிரம்மஞான பாடல் தத்துவம். சூரியனில் QUARK FUSION நிகழ்ச்சி பற்றி தெளிவான விளக்கத்தை பெற மிகச் சிறப்பாக உதவுகிறது.

"இறைவெளியே தன்னிறுக்க சூழ்ந்தழுத்தும் ஆற்றல்
இதன்திணிவு மடிப்புவிழச் சுழலும் நுண்விண்ணாம்
நிறைவெளியில் விண்சுழல நெருக்குகின்ற உரசல்
நிலைவெளியில் எழுப்புகின்ற நேரலைகள் காந்தமாம்
மறைபொருளாம் காந்தம் தன்மாத்திரைகள் ஐவகை
மலைக்காதீர் விண்கூட்டம் மாபூதம் ஐந்துமாம்
முறையாய் அக்காந்த அலைமனமாம் உயிர்உடல்களில்
மதிவுயர்ந்து இவ்வுண்மைபெற மாபிரம்மஞானமாம்"[43]

ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025

சூரியனில் QUARK FUSION நிகழ்ச்சி நடைபெறும் பொழுது. ஒரு புரோட்டானின் DOWN QUARK மற்றொரு புரோட்டானின் UPPER QUARK மீது மோதும் பொழுது UPPER QUARK ல் மட்டும் வெற்றிடம் ஏற்படுகிறது..

இந்த வெற்றிடத்த நிரப்புவதற்கு இறை நிலையின் தன்னிருக்க சூழ்ந்தலுத்தும் ஆற்றல் ... இறை துகள்களை உருவாக்கி அந்த வெற்றிடத்தை நிரப்பி விடுகிறது.

புரோட்டானில் உள்ள எடை குறைந்த UPPER QUARK ஐ எடை அதிகமான DOWN QUARK ஆக மாற்றி விடுகிறது..

அதன்மூலம் எடை குறைந்த புரோட்டானை எடை அதிகமான நியூட்ரான் ஆக மாற்றுகிறது... என்பதை விளக்கமாக கூறுகிறது....

சூரியன் கோடிக்கணக்கான வருடங்களாக நீடித்து நிலைத்து ஆற்றலை தந்து கொண்டே இருப்பதற்கு...


வேதாத்திரி மகரிஷி அவர்களின் பிரம்ம ஞான பாடல் BETA PLUS DECAY.. என்ற சூரியனைப் பற்றிய Quantum physics ஆராய்ச்சிக்கு உதவுகிறது...


வேதாத்திரி மகரிஷி அவர்களின் பிரம்மஞானப் பாடல், இறைநிலையின் ஆற்றல் எவ்வாறு குவார்க் மட்டத்தில் செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள ஒரு தத்துவார்த்த அடித்தளத்தை வழங்குகிறது. இந்த ஆன்மீக நுண்ணறிவு, விஞ்ஞான ஆய்வுகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கிறது, மேலும் பிரபஞ்சத்தின் இரகசியங்களைத் திறக்க உதவுகிறது.

இந்த ஆய்வு, அறிவியல் மற்றும் ஆன்மீகம் இரண்டுமே ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதைக் காட்டுகிறது. வேதாத்திரி மகரிஷியின் தத்துவங்கள், நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு எவ்வாறு வழிகாட்டுகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்தக் கட்டுரை, சூரியனின் ஆற்றல் உற்பத்தி மற்றும் அதன் நிலைத்தன்மை குறித்த ஆராய்ச்சியில் ஒரு புதிய பாதையைத் திறக்கும் என்று நம்புகிறோம்.

5

Aathiyoga Indian Journal of Ancient Medicine and Yoga
Peer Reviewed Multidisciplinary Journal
ISSN: 3048-9822 (Online)
Volume:2 Number: 02, March 2025




### இறைநிலை - இறைதுகள்களை

தன்னிறுக்கச் சூழ்தழுத்தும் ஆற்றலால் உருவாக்கி அந்த இறைத்துகள்களை சுழல்அலையாக சிதறிய UPPER QUARK உள்ளே அனுப்பி DOWN QUARK என்ற எடை அதிகமான QUARK ஆக மாற்றி விடுகிறது, ஆகையால் புரோட்டான் என்ற எடை குறைந்த விண்ணை நியூட்ரான் என்ற எடை அதிகமான விண்ணாக மாற்றி விடுகிறது.

Reference

1. Vedhathiri Maharishi World Community Trust. *Manavalakalai Yoga*. Vethathiri Publications, 2010.
2. Sharma, Priya. "Vedhathiri Maharishi's Holistic Approach to Life." *Zenith Magazine*, 15 Jan. 2023, www.zenithmagazine.com/vedhathiri. Accessed 26 Oct. 2023.
3. Energy Eduaction -- The proton-proton fusion process that is the source of energy from the Sun

4. Henry K.O. Norman Retired Programmer, Internet User. On Quora since 2013.
5. Sanman Senior Member of NSF (NASASpaceflight) Quark Fusion More Powerful Than H-Fusion